# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், வில்சன் மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் -திண்டுக்கல், அனன்சியா மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பிலோமினாள் - கும்பகோணம் மேரி மௌரிஸ், ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர், ரூபெல்லா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, புஷ்பமேரி, சலேத்மேரி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், லோரா மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, செபஸ்தி, எதெல்பெர்கா, அருள் சீலி.

பொதுநிலையினர்

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி ; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா, ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், இம்மாக்குலேட், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி, ஜான் ஜோசப், சிப்ரியன், பிரேமா மோரிஸ்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. புஷ்பம் - சிந்தாமணி
அருட்சகோதரி. சலேத் மேரி - திருப்பூர்
திருமதி. லீலாவதி - திண்டுக்கல்
திருமதி. ததேயுஸ் கரோலின் - திருப்பூர்

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# குழந்தை உள்ளம்

## பதிப்பாசிரியர் பக்கம்


ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே, அன்னை மரியின் பக்தர்களே ஆண்டவர் இயேசு தன்னுடைய போதனையில் “நீங்கள் குழந்தைகளாக மாறாவிட்டால் விண்ணரசுக்குள் நுழைய முடியாது, குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள்” என்று தன்னுடைய குழந்தைகள் மீதான பாசத்தை வெளிப்படுத்துகின்றார். ஆண்டவர் இயேசுவைப் போல அவருடைய தாயும் குழந்தைகள் மீது அதிகமான பாசம் உடையவராக இருக்கின்றார். மரியன்னை பலமுறை இந்த பூமியில் காட்சிக் கொடுத்திருக்கின்றார். இந்தக் காட்சிகளில் இரண்டு காட்சிகள் மிகவும் முக்கியமான காட்சிகளாக கருதப்படுகிறது. அவை 1858-ம் ஆண்டு அன்னை லூர்து நகரில் காட்சி கொடுத்தது, 1917-ம் ஆண்டு பாத்திமா நகரில் காட்சி கொடுத்தது. இந்த இரண்டு காட்சிகளின் சிறப்பம்சம் என்னவென்றால், அன்னை மரியாள் குழந்தைகளுக்கு காட்சிக் கொடுத்தது. லூர்து நகர் காட்சியில் அன்னை பெர்னதெத் என்ற சிறுமிக்கு காட்சிக் கொடுத்தார், பாத்திமா நகர் காட்சியில் அன்னை பிரான்சிஸ், ஜெசிந்தா மற்றும் லூசியா ஆகிய சிறுவர் சிறுமிகளுக்கு காட்சிக் கொடுத்தார்.

அன்னை மரியாள் ஏன் சிறுவர் சிறுமிகளுக்கு காட்சிக் கொடுக்க வேண்டும்? எத்தனையோ பெரியவர்கள் இருக்கின்றார்கள், கல்வியில் சிறந்தவர்கள் இருக்கிறார்கள், ஞானத்திலும் அறிவிலும் சிறந்தவர்கள் இருக்கின்றார்கள், ஆன்மீகவாதிகள் இருக்கிறார்கள் ஆனால் அத்தனைப்



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
மீட்பின் திட்டத்தில் ஒத்துழைத்த மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
அனைவருக்கும் உரித்தான பெருமையே - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
விண்ணோர்ந்த தாய்மரியே மண்ணோரின் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

பேரையும் விட்டுவிட்டு அன்னை மரியாள் ஏன் இந்த குழந்தைகளுக்கு காட்சிக் கொடுக்க வேண்டும்? ஒருவேளை இந்த பெரியவர்களுக்கும், சிறந்தவர்களுக்கும் காட்சிக் கொடுத்திருந்தால் அன்னை மரியாள் புகழ் உலகம் முழுவதும் பரவியிருக்கும் ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு அன்னை மரியாளைப் பற்றி எதுவும் தெரியாத அவரின் காட்சிகளை எளிதில் புரிந்து கொள்ள முடியாத இந்த சிறுவர் சிறுமிகளுக்கு ஏன் காட்சிக் கொடுக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கான பதில் ஒன்றுதான் குழந்தைகளின் உள்ளம் தூய்மையானது.

யூதக் கலாச்சாரத்தில் குழந்தைள் பெண்கள் இரண்டாம் தர மக்களாகவே கருதப்பட்டமார்கள். சமுதாயத்தில் எடுக்கப்படும் முக்கியமான முடிவுகளில் அவர்கள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. அதிலும் பெண் குழந்தைகளின் நிலை இன்னும் மோசம். பொது இடங்களில் அவர்கள் வருவதற்கு தடை இருந்தது. கல்வி கற்பதில் தடை இருந்தது. ஆனால் அதேக் கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்த இயேசுவும், அன்னை மரியாளும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத இந்த குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதனால்தான் அன்னை மரியாள் இந்தக் குழந்தைகளுக்கு காட்சிக் கொடுத்தார். தான் காட்சிக் கொடுக்கும்போது பெரியவர்களுக்கு காட்சிக் கொடுத்திருந்தால் தான் யாரென்றும் தன்னுடைய காட்சிகளின் நோக்கத்தைப் பற்றியும் விளக்குவதற்கு அன்னை மரியாளுக்கு மிகவும் எளிதாக இருந்திருக்கும், ஆனால் குழந்தைகளுக்கு காட்சிக் கொடுக்கும்போது தான் யாரென்று அவர்களுக்கு விளக்குவதே மிகவும் கடினமானதாக இருந்திருக்கும், அதற்குமேல் தன்னுடைய காட்சிகளின் நோக்கத்தை விளக்குவது இன்னும் கடினமானதாக இருந்திருக்கும். இருந்தும் அன்னை மரியாள் இந்த சிறுவர் சிறுமிகளுக்கு காட்சிக் கொடுத்ததன் காரணம் குழந்தை உள்ளம்.

குழந்தைகள் தாங்கள் பார்க்கும் அத்தனையையும் ஆச்சரியமாக பார்க்கின்றார்கள், அவர்கள் இவ்வாறு பார்க்கும்போது அவர்களிடம் எந்தவிதமான முன்சிந்தனைகள் இருப்பதில்லை, அவர்கள் இதை தீர்ப்பிடுவதும் கிடையாது. ஒவ்வொன்றையும் புதிதாக அவர்கள் எதிர்கொள்கின்றார்கள். அவர்கள் மனதில் அழுக்கு கிடையாது, அவர்களிடம் துரோகம் இருப்பதில்லை, அவர்களிடம் பழிவாங்கும் குணம் இருப்பதில்லை. மாசில்லாத மனம் மட்டும்தான் இருக்கிறது. குழந்தைகள் தெய்வத்திற்கு சமம் என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட உள்ளங்களை ஆண்டவர் இயேசுவும், அன்னை மரியாளும் தேடிச் சென்றதில் எந்த ஒரு ஆச்சரியமும் இல்லை. இந்தக் காட்சிகளின் மூலம் அன்னை மரியாவும், ஆண்டவர் இயேசுவும் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால் நாம் அனைவரும் இந்தக் குழந்தைகளைப் போல மாறவேண்டும் இங்கு குழந்தைகளைப் போல மாறுவது என்பது குழந்தைகளைப்போல நாம் வெள்ளை உள்ளம் கொண்டவர்களாக தூய்மையின் அடையாளமாக இருக்க வேண்டும். உலகில் பல்வேறு இடங்களில் அன்னைக் காட்சிக் கொடுப்பது தன்னை முன்னிறுத்துவதற்கு அல்ல தன் மகன் இயேசுவின் போதனைகளை முன்னிறுத்துவதற்கு. ஆகவே குழந்தை உள்ளம் உடையவர்களாக ஆண்டவர் இயேசுவின் விழுமியங்களை வாழவாக்குவோம்.

**குழந்தைகளைப் பார்த்தால் மகிழ்ச்சி**
**குழந்தையாக வாழ்ந்தால் வாழ்க்கை அழகு**





**அக்ஸிலியா**

நான் மதுரைக்கு போனபோது ஒரு பெரிய விபத்து நடந்தது. எனக்கு எந்த ஒரு காயமும் இல்லாமல் காப்பாற்றிய அம்மாவுக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கிளாரா - கூடுவாஞ்சேரி**

என் மகளுக்கு மணமுடிந்து மழலை வரம் கிடைக்கவில்லை. நான் மாதாவிடம் மனமுருகி மன்றாடினேன். பெண் குழந்தை கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பிரிஸில்லா – கோயம்பத்தூர்**

என் மகளுக்கு குழந்தை உண்டானது. ஆனால் அது கருச்சிதைவு ஆகிவிடும் என்று மருத்துவர் கூறினார். நான் மாதமாவிடம் என் மகளுக்கு நல்லபடியாக குழந்தை பிறக்க வேண்டும் என்று மன்றாடினேன். அதேபோல் குழந்தையும் நல்லபடியாக பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மோட்சமேரி**

என் பேரனுக்கு காய்ச்சல் இருந்தது. பள்ளிலிருந்து வீட்டிற்கு அனுப்பி விட்டனர். என் பேரனுக்கு காய்ச்சல் விடுபட மாதாவிடம் ஜெபமாலை ஜெபித்தேன். காய்ச்சல் நீங்கியது. நோய் நீங்க பரிந்துரை செய்த அம்மாவுக்கு கோடான கோடி நன்றிகள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோகன் - நாகர்கோவில்**

எனக்கு வேலை கிடைக்காமல் இருந்தது. ஒரு பிராஜக்ட் செய்து கொண்டு போனேன். நேர்முகத்தேர்வு நடந்தது. மிகவும் எளிய கேள்விகளைக் கேட்டார்கள். வேலையும் கிடைத்தது. எனக்கு வேலை கொடுத்த அம்மாவுக்கு கோடான கோடி நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மேரி ஜோஸ்பின்**

என் குடும்பத்தில் சில பேருக்கு குழந்தை வரம் இல்லை. என் அக்கா மகளுக்கும் குழந்தை இல்லை என்று ஜெபித்தோம். மழலை வரம் கிடைத்தது. என் கணவருக்கு நெடுநாட்களாக பல்வலி இருந்தது. நாங்கள் குழந்தை வரத்திற்காகதான் மாதாவிடம் வந்தோம். ஆனால் அன்னை என் கணவரின் பல்வலியைக் குணப்படுத்தியதோடு என் அக்கா மகளுக்கும் குழந்தை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**புவனேஸ்வரி**

எனக்கு திருமணமாகி 4 வருடங்கள் கடந்தும் குழந்தை வரம் இல்லாமலிருந்தது. ஜீவ மாதாவிடம் மன்றாடினேன். மாதாவின் பரிந்துரையால் எனக்கு பெண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சௌம்யா – சோழிங்கநல்லூர்**

என் குடும்பத்தில் எனக்கும் என் கணவருக்கும் நிறைய கருத்து வேறுபாடு காரணமாக குடும்பம் ஒற்றுமையில்லாமல் இருந்தது. மேலும் விவாகரத்து வரைக்கும் போய்விட்டது. என் பெற்றோர் நீ என்ன முடிவெடுக்கிறாயோ உன் விருப்பம் என்றார்கள். நான் ஜீவமாதாவிடம் மனமுருக மன்றாடினேன். எங்களுக்கு தகுந்த ஆலோசனை கூறினார்கள். பிறகு என் கணவர் தன் தவறை உணர்ந்து என்னை ஏற்றுக் கொண்டு நாங்கள் இருவரும் மன நிம்மதியோடு வாழ்கிறோம். ஒன்றரை வருடமாக ஒரு கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு பதவி உயர்வு கிடைத்தது. அனைத்தையும் பெற எங்களுக்காக பரிந்துரை செய்த ஜீவமாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு வயதான பெண்மணி மலைப் பாதையில் நடந்து பயணம் மேற்கொண்டார். தன்னுடைய பயணத்தின் போது ஒரு விலை மதிப்புமிக்க கல்லை கண்டு கொண்டார். அந்த கல்லை எடுத்து தன்னுடைய பையில் வைத்தார். அடுத்த நாள் பயணத்தின்போது, பசியோடு இருந்த மற்றொரு பயணியை சந்தித்தார். தன்னுடைய பையை திறந்து உணவைப் பகிர்ந்து கொண்டார். அப்போது விலைமதிப்புமிக்க கல்லை கவனித்தார் மற்றொரு பயணி. உடனே அந்த பயணி இந்த கல்லின் விலை எவ்வளவு எனக்கு விற்க முடியுமா? நான் அதற்கான தொகையை தருகிறேன் என்று கூறினார். அதற்கு அந்த வயதான பெண் தொகையெல்லாம் தேவையில்லை கல்லை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு பயணத்தை மேற்கொண்டார். ஒருநாள் கழிந்த பிறகு கல்லை பெற்றுக் கொண்ட பயணியின் மனது குறுகுறுத்தது. உடனே அவர் அந்த பெண்மணியைத் தேடி மலைப்பாதையில் வந்து கண்டு கொண்டார். அவர் இந்த கல்லை விடவும் விலை மதிப்புமிக்க ஒன்று உங்களிடம் உள்ளது, அதுதான் இந்த கல்லை இலவசமாக கொடுக்க தூண்டியது, ஆகவே இந்த கல்லை வைத்துக் கொண்டு, நீங்கள் மறைத்து வைத்திருக்கும் அந்த விலைமதிப்புமிக்க பொருளை கொடுங்கள் என்று கேட்டார். அந்த பெண்மணி சிரித்து கொண்டே கூறினார். அந்த விலை மதிப்புமிக்க பொருள் திருவிவிலியம் என்று.

விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்கிறார் புனித எரோனிமுஸ். தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது, வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்(யோவா 1:1,2) அன்னை மரியாள் இறைவனின் வார்த்தைக்கு இசைவு அளித்ததால் இயேசுவின் தாயானார். மரியா இறைவார்த்தையை தம் உள்ளத்தில் பதித்து சிந்தித்து வந்தார்(லூக் 2:19). அன்னையின் பிள்ளைகளாகிய நாம் இறைவார்த்தையை நம்பிக்கையின் ஒளியில், மரியாவை வழிகாட்டியாக கொண்டு வாசிக்க வேண்டும். இறைவார்த்தையை தியானித்து, அதன்படி வாழ்ந்து அதை மற்றவர்களுக்கு அறிவித்த மரியாவைப் போல வாழ வேண்டும். நாம் எதை விதைக்கின்றோமோ அதையே அறுவடை செய்வோம். ஆகவே இறைவார்த்தையை நம்மில் விதைப்போம், பலன் தரும் கிறிஸ்தவர்களை தொடர்ந்து வாழ முயல்வோம்.

# இறைவனின் மீட்பின் திட்டத்தில் ஒத்துழைத்த மரியா - II

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

பெண் சீடர்களுக்குத் தலைமை தாங்கி அவர்களின் உடைமைகளைக் கொண்டு இயேசுவின் இறையாட்சிப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். இறைவார்த்தையின்படி நடந்ததால், தன் அன்னையையே பிறருக்கு முன்மாதிரியாக இயேசு எடுத்துக் கூறினார். மரியாவின் சீடத்துவ வாழ்வில் அவரிடம் காணப்பட்ட புண்ணியங்களை கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். அவரின் ஆகட்டும் என்ற மனநிலை, இறைவன் மீது, அவரது ஆற்றல் மீது கொண்டிருந்த நம்பிக்கை, இயேசுவை முழுமையாக அன்பு செய்து அவரின் ஒப்பற்றதாயாக, பணிபுரியும் சீடத்தியாக விளங்கியது, இறைவார்த்தைக்குக் கீழ்படிந்து இறைத்திருவுளத்தை நிறைவேற்றியது ஆகிய அனைத்தும் எந்நாளும் நாம் பின்பற்ற வேண்டிய புண்ணியங்களாகும்.

**மீட்புப் பயணத்தில் மரியா**

சிமியோன் இறைவாக்கினர் உரைத்தபடியே தனது மகன் எதிர்க்கப்படும் அறிகுறியாக பரிசேயர், சதுசேயர்கள், சட்டவல்லுநர்களால் நடத்தப்படும் போது அவர் அருகில் தோழமை உணர்வோடு நின்றார். துன்புறும் ஊழியரின் பாடுகளிலும் மரணத்திலும் முழுமையாகப் பங்கேற்றார். தாயின் இதயத்தை ஆயிரம் வாட்கள் ஊடுருவின. அத்தருணத்திலும் கூட அவர் சிலுவையின் அருகில் நின்றார். திருஅவைக்குத் தாயாகும் பொறுப்பினை ஏற்றார். அன்று சிலுவையடியில் துன்புறும் மகனின் அருகில் நின்றது







அம்மா.........
நினைவிருக்கிறதா.... உனக்கு?
நான் ஆறாம் நிலையில் படித்தகாலம்
ஓட்டைக் காலணா என்ற செப்புக்காசு
உபயோகத்தில் இருந்த காலம்
காலணாச் சில்லறையை
கவனமாகச் சேர்த்து வைத்தேன்
காலணா ஓட்டையிலே
நீலரிபன் கோத்துக் கோத்து
பளபளக்கும் மாலையாக
தொடுத்தெடுத்தேன் பெரிதாக
மேமாத வணக்க நாளில் உனக்கு
அம்மாலையிட்டு அழகு செய்தேன்
இளவயதுக் கன்னியாக – என்
சிறுவயதில் உனைக் கண்டேன்
என்முதுமையிலும் உன்னை நான்
அப்படியே காண்கின்றேன்
நீ என்றுமே இளமையாக
இருப்பது என்ன இரகசியமோ!
நீ விண்ணேற்புப் பெற்றஉண்மை
வேதம் கூறும் உறுதிப்பாடு
என்றாலும் எப்பொழுதும்
எம்முடன் இருக்கின்றாய்
ஜெகன் மாதா அன்னையாக
ஆரோக்கிய அன்னையாக
லூர்து வாழ் அன்னையாக
ஃபாத்திமா அன்னையாக
இன்னும் எத்தனையோ பெயர்பூண்ட
ஆனால் ஒரே ஒரு அன்னையாக
தூய்மைக்குப் பொருளாக
அம்மா நீ இருக்கின்றாய்
அம்மா....
உன்பாதம் தஞ்சமென
உளம்நைந்து வருவோரை – உன்
அன்பான அருட்கருத்தால்
அரவணைத்துக் காத்திடுவாய்

# விண்ணார்ந்த தாய்மரியே மண்ணோரின் காவலியே!

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

ஆகட்டும் எனச் சொல்லி
ஆதவனை ஈன்றவளே
அனுதினமும் உடனிருந்து
அகிலத்தைக் காப்பவளே
அடைக்கலமாய் வருவோர்க்கு
ஆறுதலாய் இருப்பவளே
விண்ணார்ந்த தாய்மரியே
மண்ணோரின் காவலியே
உம்மில் சரணடைய ஒன்பது நாள் விழாக் கண்டு
ஓடோடி வருகின்றோம்
உவந்து எமை அரவணைப்பாய்
நான் சிறுமியாய் இருந்த நாளில்
நான் பிறந்த ஊர்க்கோவிலினில்
அழகாக நீ நிற்கும் உன்உருவம்
அப்படியே என்நெஞ்சில் பதிந்துவிட
நான் எங்கெங்கு சென்றாலும்
மாதா எனில் உன்உருதான் தெரிகிறது
மிகவும் இரக்கமுள்ள தாயே – என
உன்னிடம்தான் முதன்முதலில் நான்
வேண்டக் கற்றேன்
இந்தச் செபம்செய்யும் வேளை எல்லாம்
என்மனக் கண்ணில்
உன் உருவைக் காண்கின்றேன்
தாமரைத் தண்டு உந்தன்
தாழ்ந்த சிரமானதோ
செந்தாமரை மலரே உந்தன்
சிவந்த முகமானதோ
தாமரை மொட்டே உந்தன்
குவிந்த கரமானதோ
எந்தநாட்டுச் சிற்பி உன்னை
உயிர்உருவாய்ப் படைத்தானோ!







போல, இன்றும் பலவகையான சிலுவைகளை சுமப்போர், போர், வன்முறையினால் பாதிக்கப்படுவோர் அருகில் உணரக் கூடியதாயாய் இருக்கின்றார். சொல்லொண்ணாத வேதனை நிறைவியாகுலங்களால் தனது மகனின் பாடுகள், மரணத்தில் தன்னை முழுமையாக இணைத்தார். இறைவனின் மீட்புதிட்டத்தில் இவ்வாறு தனது பங்கினை அளித்தார். இன்றும் மீட்பின் பயன்களை தாய்த் திருஅவையின் உறுப்பினர்கள் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்று இறைவனிடம் தொடர்ந்து மன்றாடுகின்றார். உயிர்ப்பின் ஆற்றலாம் மகிழ்வை அனைவரும் அனுபவிக்க புதிய இரசத்தைப் பருக நம்மை அழைக்கின்றார். இறைவனின் மீட்பின் பயன்களை அனுபவிக்க, பாவிகளை மனமாற்றத்திற்கு அழைக்கின்றார். உள்ளத்திலும் உடலிலும் இயேசுவின் குணமளிக்கும் சக்தியை உணர்த்தி திருத்தலங்களில் உறைகின்றார். இவ்வாறு பயணம் செய்யும் திருஅவையின் மீட்புப் பயணத் திட்டத்தில் உடன் பயணிக்கின்றார்.

**நிறைவுரை**

இயேசுவின் மீட்பின் செயல்பாடுகளில் அவரின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு அருள்பொழிவு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் இன்றும் திருஅவையில் நாம் இவற்றின் பயன்களை அனுபவிப்பவர்களாகவும் இருக்கிறோம். உயிர்த்த இயேசுதாம் விண்ணகம் செல்லும்முன் தனது சீடர்களிடம் எருசலேமுக்குச் சென்று கோவிலை விட்டு நீங்காமல் செபிக்க கட்டளையிடுகிறார். சிதறிக் கிடந்த சீடர்களிடம் இருந்த அச்சத்தைப் போக்கிய அன்னை மரியா செபத்தில் மூழ்கினார். தொடக்க காலத் திருஅவையின் தாயாக, சீடர்கள் மத்தியில் அமர்ந்து தூய ஆவியாரின் வல்லமைக்காகக் காத்திருந்தார். நாசரேத்தில் மங்கள வார்த்தை நிகழ்வின் போது நிழலாடிய அதே ஆவியார் இங்கும் மாடி அறையில் பலத்த இரைச்சலின் மத்தியில் அக்கினி நாவின் வடிவத்தில் இறங்கினார். பெந்தகோஸ்துப் பெருவிழாவில் திருஅவை பிறந்தது.



அன்னை மரியா சாட்சி பகர்ந்தார். புழைய உடன்படிக்கையின் மகளான மரியா, இன்று புதிய உடன்படிக்கையின் தாயாகத் திகழ்கிறார். அவரின் நம்பிக்கை, கீழ்ப்படிதல், கிறிஸ்துவின் மீது கொண்டிருந்த உண்மையான அன்பு அனைத்தும் இன்றும் திருஅவையில் போற்றப்படுகிறது. தூய ஆவியாரைப் பெற்ற பின் மரியா யோவானுடன் எபேசு நகருக்குச் சென்றதாகவும், அங்கு இறந்ததாகவும் மரபு கூறுகிறது. தொடக்க காலத் திருஅவை முதலில் யூதர்களால், பின்பு உரோமையர்களால் வேதகலாபனைக்கு உள்ளானதை மரியா அறிந்திருந்ததார் எனவும் நம்பப்படுகிறது.

இந்த மானுடம் உயிர் பெற மகிழ்வுடன் இம்மண்ணிலும் விண்ணுலகிலும் வாழ தனது மகனை நமக்கு சிலுவையில் கையளித்த மீட்பின் திட்டத்தில் மரியாவின் பங்கினை இறைவன் ஏற்றுக் கொண்டார். ஆவரை உயர்த்தினார். தனது ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொண்டு அனைத்து புனிதர்களிலும் முதல் இடத்தை அவருக்கு அளித்துள்ளார். இவ்வாறு மாட்சிப் படுத்தப் பெற்றிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவு பெறப் போகும் திருஅவையின் உருவும் தொடக்கமுமாய் இருக்கின்றார். பயணம் செய்யும் திருஅவையின் உறுதியான எதிர்நோக்குக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றார். திருப்பாடல் 71 மிகஅழகாகக் கூறுகிறது: ஆண்டவரே உமது மீட்பை நான் என்றென்றும் பாடுவேன். யார் பாடுவர்? மீட்பை வாழ்பவர்கள் விடுதலை வாழ்வை அகத்திலும் புறத்திலும் வாழ்பவர்கள். மானிடரின் விடுதலைக்காக உழைப்பவர்கள். இவர்கள் எல்லோரும் இயேசுவின் மீட்புதரும் ஆற்றலைப் பெறுபவர்கள். எனவே மீட்பின் மக்களாக வாழ்வோம். மீட்படைந்தோரின் தாயாம் அன்னை மரியாவின் வழியில் செல்வோம்.





இருந்தும் அவர் நம்பிக்கையில் நிலைத்திருந்தார்தோமினிக்கன் சபையை சேர்ந்தவர்களுக்கு மாதாவை குறித்து ஒரு மன்றாட்டு மாலை உள்ளது அதில் பின்வரும் மன்றாட்டு உள்ளது புனித சனிக்கிழமை அன்று இயேசுவை கடவுள் என்று நம்பிய மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் இது ஒரு அற்புதமான மன்றாட்டு மாலை. திருச்சபை தூய கன்னி மரியாவை வேறு பெற்றோர் என்று எதனால் அழைக்கிறது? லூக்கா 1:48 - ல் இது முதல் என்னை எல்லா தலைமுறைகளும் வேறுபட்டவர் என்று அழைப்பர் என்று கூறுகின்றார். மேற்காணும் இரண்டு நிகழ்வுகளிலும் அதாவது ஒன்று அதிர்ச்சியும் ஆணந்தமும் கலந்தது. மற்றொன்று துக்கமும், வேதனையும், துயறும் கலந்த அனுபவம். ஒன்று பிறப்பு, மற்றொன்று இறப்பு. ஒன்று தொடக்கம், அடுத்தது துயரமான முடிவு. இந்த இரண்டு நிகழ்வுகளிலும் மரியாள் நம்பிக்கை தளராமல் இறை யேசு காட்டிய மீட்பு பணியினை தொடர முற்பட்டாள்.

தனது இறை அனுபவத்தில் மரியாள் அமைதியாகவும், அதேசமயம் அவசரப்படாமலும், மனம் கலங்கி போகாமலும் இறைவனின் வார்த்தையை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதனை நம்பி இறை மகன் இயேசுவுடனான மீட்பின் பயணத்தை அவருக்குப் பின் தொடர்ந்தாள். மரியாளின் இந்த அனுபவமானது அவள் இறைவன் மீது வைத்திருந்த ஆழமான நம்பிக்கையை காட்டுகிறது. நாம் நமது வாழ்க்கையிலே பல விதமான சோதனைகளை சந்திக்கிறோம். வேதனைகளையும் சந்திக்கின்றோம் துன்பங்களையும் துயரங்களையும் கடந்து போகிறோம் உடலாலும் மனதாலும் சோர்வடைந்து போகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் மாதா தன் வாழ்க்கையின் மூலம் நமக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் கருவியாக இருக்கிறாள். அன்னை மரியாளுடைய நம்பிக்கையானது கிறிஸ்துவில் வேரூன்றியதாக இருக்கிறது. கிறிஸ்துவிடத்தில் அவர் நம்மை அழைத்துச் செல்லும் அன்னையாக இருக்கின்றாள்.

கிறிஸ்துவின் பாதையில் நம்மை வழி நடத்திச் செல்லும் வழிகாட்டியாக விளங்குகின்றார். கிறிஸ்து கண்டிப்பாக உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையோடு காத்திருந்த அந்த தாய் அவரது சீடர்கள் அனைவருக்கும் சிறந்ததொரு தாயாக அவர்களை வழிநடத்தினார். திருச்சபையை கட்டி எழுப்பினார். திருச்சபை அவளை நம்பிக்கையின் தாய் என்று அன்போடு அழைக்கிறது. அவர் இறை இயேசுவின் சீடர்களாகிய நம்மோடும் இணைந்து என்றென்றும் நம்மை நம்பிக்கையோடு இன்றளவும் இறை இயேசுவிடம் நமக்காக பரிந்து பேசி நம்மை ஒளியின் பாதையிலே வழிநடத்திக் கொண்டிருக்கிறார். உலகத்தில் எவ்வளவோ பெண்கள் இருக்க நம் நம்பிக்கையின் அன்னையை இறைவன் பெண்களுள் பேறு பெற்றவள் என்று தேர்ந்தெடுத்து இறைவனை அவளிடத்தில் கருவுறச் செய்கிறார்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா 14

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

**மரியாள், நம்பிக்கையின் அன்னை**

ஆகட்டும் என்ற ஒற்றை வார்த்தையில் அன்னை மரியாள் இறைத் திட்டத்தை மனமுவந்து தன்னுல் ஏற்றுக் கொண்டாள். கபிரியேல் தூதர் கன்னி மரியாள் முன் தோன்றி பெண்களுள் பேறு பெற்றவள் நீரே இறைவன் மனு உரு கொண்டு இவ்வுலகில் பிறக்க தங்களையே தேர்ந்தெடுத்திருக்கின்றார் என்று தூதுரை சொன்னபோது மனம் கலங்கிய மரியாள், தான் மணமாகாதவள் என்று சற்று தயங்கினாலும் இறைவன் தன்னை தேர்ந்தெடுத்ததை கண்டு மனமுவந்து அதை ஏற்றுக் கொண்டார்.

கிறிஸ்தவ நம்பிக்கையின்படி மரியா தூய ஆவியினால் தம் கண்ணிமைக்கு எந்தவித பழுதும் ஏற்படாமலேயே இயேசுவை கருத்தாங்கினார். இறை வார்த்தை அவரிடம் தங்கியது. அவர் கருவுற்று இருப்பதை மறைக்கவும் முடியவில்லை, மறுக்கவும் முடியவில்லை எப்படி கருவுற்றார் என்று சரியான விளக்கம் கொடுக்கவும் முடியவில்லை. ஆனாலும் மரியாள் இறைவனை கருத்தில் கொண்டு நம்பிக்கையில் நிலைத்திருந்தார். யோசேப்பு மணமகளை காணச் சென்றபோது மரியா கருவுற்று இருப்பதை அறிய நேர்ந்தால் அவருடைய மனம் எப்படி துடித்திருக்கும். அதை எவ்வாறு தாங்கிக்கொள்ள முடியும். அதுதான் மாதாவின் இதயத்தில் பாய்ந்த முதல் வாளாக இருந்திருக்கும்.

மாதாவின் வாழ்க்கையிலே தோன்றிய மாபெரும் சோதனை தான் கல்வாரியில் தம் ஒரே மகனான இயேசுவின் துன்பங்களும் இறப்பும். மிகவும் கொடிய முறையில் பெரும் துயரங்களுக்கு உள்ளாகி சிலுவையில் அறை யுண்டவரை நோக்கி என் இறைவா என்று மாதா சொன்னார். அதுதான் நம்பிக்கையின் மகுடமாக எண்ணப்படுகிறது. காரணம் அவரது நம்பிக்கை. தன் மகன் எப்படியும் மீண்டு வருவார், மீண்டும் வருவார் மூன்றாம் நாள் கல்லறையில் இருந்து உயிர் பெறுவார். என்ற நம்பிக்கையில் மாதா இருந்தார். ஆகவே, அவரை நம்பிக்கையின் அன்னையாக காண்கின்றோம்.

நம்பிக்கை எனும் காரியத்தில் மிகவும் கடினமான சோதனைக்கு உள்ளானவர் கண்டிப்பாக கன்னி மரியா தான் நம்பிக்கை கொண்டோரின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாமும், பழைய ஏற்பாட்டு நேர்மையாளரான யோபுவும் மாதாவுக்கு நிகராக மாட்டார்கள் அவ்வளவு கொடிய சோதனைகளை மாதா ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.





# அன்னையின் ௬ திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## பொம்பேய் நகர் ஜெபமாலை அன்னை திருத்தலம், இத்தாலி-I

இயற்கை எழில் கொஞ்சும் இத்தாலி நாடு எதிர்கொண்ட இயற்கை சீற்றங்களுள் வரலாறு ஆழமாக பதிந்திருக்கும் ஒரு நிகழ்வு, பொம்பேய் நகர் வெசூவியோ எரிமலை வெடிப்பு ஆகும். ஏறக்குறைய, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இத்துயரச் சம்பவம் நிகழ்ந்திருந்தாலும், இன்று வரை பல்வேறு விதமான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை ஆவணப்படுத்தி, இன்னும் புகைவிட்டு கொண்டே இருக்கும் வெசூவியோ எரிமலையை காணவருகிறவர்கள் பார்க்கும் விதமாக காட்சிப் படுத்தியிருக்கிறார்கள். இத்துயரச் சம்பவம் கி.பி. 79ஆம் ஆண்டு ஆகஸ்டு 24ஆம் நாள் நடைபெற்றது. மதியம் ஒரு மணிக்கு மேல் தன் கோபக்கனலை வீச ஆரம்பித்த இந்த எரிமலை வெடிப்பு இரண்டு நாள்கள் தொடர்ந்ததாக வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. இந்த இயற்கை சீற்றத்தின் காரணமாக பொம்பேய் என்கிற இந்த வரலாற்று சிறப்புமிக்க உரோமை நகரம் அழிந்து போனது.

இந்நகரம் அழிவின் சோகத்திலிருந்து படிப்படியாக விடுபட்டு, வரலாற்றின் சுவடுகளை தங்கள் மத்தியில் ஏற்று வாழும் மக்கள் வசிக்கும் இடமாக மாறியுள்ளது. ஏறக்குறைய, நான்காம் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவர்கள் இங்கு வசித்து வருகிறார்கள். முதன் முதலில் இங்கு எழுப்பப்பட்ட ஆலயம் உலக மீட்பருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. 11ஆம் நூற்றாண்டில் இந்த ஆலயமானது பெனடிக்ட் துறவற சபையினரின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்ச் பேரரசர் நெப்போலியன் படையெடுப்பின் போது பிடிக்கப்பட்ட இந்த ஆலயமானது, பராமரிப்பின்றி சிதிலமடைந்தது. இக்காலக்கட்டத்தில், இத்தாலிய மக்கள் தங்கள் பராமரிப்பில் பேணுவதாக வாக்குறுதியளித்து பெற்ற 18 பங்குகளில் இதுவும் ஒன்றாகும். இப்பங்குகளில் பங்குத் தந்தையை நியமிக்கும் உரிமையை மக்களே பெற்றிருந்தனர்.



கி.பி. 1891ல் கண்டெடுக்கப்பட்ட ஒரு ஆவணமானது, பொம்பேய் நகர் பற்றியும் அங்கிருந்த ஆலயத்தை பற்றியும் பின்வருமாறு கூறுகிறது: □இருபது ஆண்டுகளுக்கு முன்வரை இந்த ஆலயம் இடிந்து, பயன்பாட்டிற்கு உகந்த ஆலயமாக இல்லாமல் இருந்தது. இங்கு நிலவிய வறுமை பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்ப அனுமதிக்க வில்லை. இப்பகுதி வாழ் மக்களில் பெரும்பாலோனோர் மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்தனர், குற்றம் புரிபவர்களாகவும், நிறையபேர் திருடர்களாகவும் இருந்தனர்.□ இந்த குறிப்பு அப்பகுதியின் நிலைமையையும், அவர்களின் ஆன்மீக தாழ்நிலையையும் சுட்டிக் காட்டுகிறது.

இப்பகுதியின் நிலையை மாற்றி, இன்று பொம்பேய் என்றால், ஜெபமாலை அன்னை வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருத்தலம் என்று சொல்லும் அளவுக்கு மாற்றியவர்கள் பர்தோலோ லோங்கோ மற்றும் அவருடைய மனைவி சீமாட்டி ∴பர்னராரோ தெ புஸ்கோவும் ஆவர்.

பர்தோலோ லோங்கோ ஒரு புகழ்பெற்ற மருத்துவர் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய தந்தையும் மருத்துவர் ஆவர். ஆனால், இவர் மருத்துவத்தில் நாட்டம் இல்லாமல் வழக்கறிஞர் ஆனார். படிக்கும் காலத்திலேயே சாத்தானை வழிபடும் ஒரு பிரிவினை சபையில் சேர்ந்தார். தன் சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் கொண்டு கத்தோலிக்க திருஅவையை கேலிசெய்தும், கத்தோலிக்கர்களை அவமானமும் படுத்தினார். பர்தோலோவின் உற்ற நண்பராக விளங்கிய வின்சென்ட் பேதே, பர்தோலோவிற்கு இயேசுவின் கனிவு நிறைந்த உள்ளத்தை உணர வைத்தார். அத்துடன், அப்பகுதியில் வாழ்ந்த, புனிதத்தில் ஊன்றியிருந்த தோமினிக்கன் குரு அருட்பணி. அல்பெர்தோ ரதென்தேவிடம் பர்தோலோவை அறிமுகம் செய்து வைத்தார். இத்தொமினிக்கன் குருவானவர் ஆழ்ந்த இறைப்பக்தியும், அன்னை மரியாவின் மீது மிகுந்தப் பற்றுக்கொண்டிருந்தார். ஜெபமாலையை தன் உயிரெனக் கருதினார். அருட்பணி. அல்பெர்தோவின நட்பு பர்தோலோவின வாழ்வை மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் இணைந்த அவர், திருமுழுக்கு பெற்றார். தன் திருமுழுக்கின் பெயராக □மரியா□ என்ற அன்னையின் நாமத்தை





மழை காலங்களில் ஒட்டுகின்ற புழுதி மற்றும் சகதியை கழுவுவதற்காகவும் 2 அவர்கள் சாப்பிட்ட முன்பும் பின்னும் கைகளை கழுவுவதற்காகவும் அந்த ஜாடிகளில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டது.

அந்த ஜாடிகளில் இருந்த தண்ணீர் உடல் சுத்தத்தை மட்டுமே நோக்கமாக கொண்டிருந்தது. ஆனால் மாற்றம் கொண்டு வருகிறார் மரியா. அதாவது உடல் சுத்தமே முக்கியம் என்ற கருத்தியலை மரியா மாற்றுகின்றார். எனவே தண்ணீரை திராட்சை இரசமாக மாற்ற இயேசுவிடம் கேட்கின்றார். அந்த புதுமையும் நடைபெறுகிறது. விவிலியத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு அற்புதமும், கடவுளின் பிரசன்னத்தைக் குறிப்பதாக விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த புதுமையில் திராட்சை இரசம் கடவுளின் உடனிருப்பை பிரதிபலிக்கிறது. விவிலியத்தின்படி திராட்சை இரசம் மக்களுக்கு பரிமாறப்பட்டது கடவுளின் உடனிருப்பு அனைவருக்கும் கிடைத்தது என்பதாகும். எனவே அங்கிருந்த அனைவரும் பரிசுத்தமாகினர். ஏனெனில் கடவுளின் உடனிருப்புதான் அன்னை மரியாவை மகா பரிசுத்தமாக்கியது.

புனித அம்புரோஸ் மனதிலே மரியாவை நினையுங்கள் இதயத்தில் இயேசு வளர்வார் என்கிறார். கடவுளின் உடனிருப்பை உணர மகா பரிசுத்தமாக வீற்றிருக்கும் அன்னையின் வழியாக செல்ல முயல்வோம். பாவிகள் ஏறுவதற்காக அமைக்கப்பட்ட ஏணி மரியா. இயேசு வழியாக வந்ததால் நாமும் அவரிடம் செல்ல இந்தப் படிகளில்தான் ஏற வேண்டும் என்று புனித பொ்னதெத் கூறுகின்றார். அன்னை மரியா புனிதத்தின் முழுமை. மனிதன் புனிதமடைவது முடியாதது ஒன்றுமில்லை. ஆனால் எளிதானதும் அல்ல அன்னை மரியா கண்டிப்பாக சோதனைகளுக்கிடையே கடினப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஆண்டவரின் உடனிருப்பை உணர்ந்து இறையருளில் புத்துணர்வோடு பங்கெடுத்தார். மேலும் புனிதமே உருவானார். நாமும் புனிதமடைய அன்னையை பின்பற்றுவோம். புனிதத்தின் பாதையில் பயணிப்போம்.

எப்பொழுதெல்லாம் தூய ஆவி மனிதர்களை ஆட்கொள்கிறதோ, கடவுளின் உடனிருப்பு மனிதனோடு சங்கமமாகிறதோ, அப்போதெல்லாம் அவர்கள் புனிதம் அடைகிறார்கள். எசாயாவின் இறை அழைப்பு இதை நமக்கு தெளிவுபடுத்துகிறது.(எசா 6.1முதல்) எசாயா, தூய ஆவியால் தனது பரிசுத்த தன்மையை உணர்ந்தும் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார் (எசா 6.8). அன்னை மரியாவின் அர்ப்பணிப்பு வார்த்தை இதோ உமது அடிமை அவரின் மகா பரிசுத்தத்தை உணர்த்துகிறது. ஏனெனில் அன்னை மரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு கடவுளையே கருவாகத் தாங்குகிறார்(லூக் 1.53). கடவுளின் உடனிருப்பு மரியாவை பரிசுத்தப் படுத்துகிறது.

படைப்புக்கள் அனைத்தையும் தனது வார்த்தையால் படைத்த கடவுள், படைப்பின் சிகரமான மனிதன் பரிசுத்தம் அடைய வேண்டும் என்பதற்காக தனது கரம் கொண்டு உருவாக்குகின்றார். தனது கைரேகைகள் மனிதனில் இரத்தஓட்டங்களாக மாற வேண்டும் என்றெண்ணி தானே குயவன் போல் உடனிருந்து உருவாக்குகின்றார். மனித இனம் தன்னைப் போல் தூய்மையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

ஆனால் மனிதன் வெளிப்புறத் தூய்மையே தாரக மந்திரமாக தூக்கிப் பிடிக்கின்றான். யூத சமுதாயத்தில் உடல் சுத்தமே கடவுளிடம் எளிமையை ஏற்படுத்துகிறது என்றெண்ணி உடல் சுத்தம் தொடர்பாக பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக யூத முறைப்படி கருவுறுவதிலோ, குழந்தை பெறுவதிலோ ஒரு பெண்ணின் பரிசுத்தம் தூய்மை கெடுவதில்லை மாறாக குழந்தை பேற்றின்போது ஏற்படுகின்ற இரத்த இழப்பே அப்பெண்ணின் தூய்மையை நிர்ணயிக்கிறது. அதாவது அப்பெண் ஆண்குழந்தை பிறந்ததிலிருந்து 14 நாட்களும் தீட்டாக கருதப்பட்டாள். இந்த நாட்களில் இவர்கள் கடவுளிடமிருந்து (உடலளவில்) பிரித்து வைக்கப்படுவார்கள் இங்கு உடல் தூய்மையை காரணமாக வைத்து கடவுளின் உடனிருப்பு மறுக்கப்படுகிறது.

ஆனால் கடவுளின் உடனிருப்புதான் மனிதனைத் தூய்மையாக்கும். வெறுமனே, சடங்குகளும், சம்பிரதாயங்களும் அல்ல என்று அன்னை மரியா தன் வாழ்வு மூலம் வெளிப்படுத்துகின்றார். கானாவூர் திருமணத்தில் பார்க்கின்றபோது யோவான் 2-ல், கடவுளின் உடனிருப்பு மனிதனோடு இருக்கிறபோது உடலைச் சுத்தப்படுத்தும் சடங்குமுறை தேவையற்றது என்று மரியா உணர்த்துகின்றார். திருமண வீட்டில் தண்ணீர் ஊற்றி வைப்பதற்காக கற்சாடிகள் பயன்படுத்தப்பட்டன. யூதர்கள் இரண்டு காரணங்களுக்காக கற்சாடிகளில் தண்ணீர் ஊற்றி வைத்தனர். 1 வெயில் மற்றும்





ஏற்றுக்கொண்டார். பர்தோலோ அன்னை மரியாவை பாவிகளின் அடைக்கலமாக பார்த்தார். தன்னுடைய மனமாற்றத்திற்கு காரணம் அன்னை மரியே என்ற அவர், பாவிகளை கிறிஸ்துவின் அழைத்து செல்கிறவர் அன்னையே என்றார். தன் பாவ வாழ்விற்காக பரிகாரம் செய்ய விரும்பிய அவர், பல்வேறு தவ முயற்சிகளில் ஈடுபட்டார். தன் பாவங்களுக்கு பரிகாரமாக, இதுவரை இழித்து பேசிய திருஅவைக்கு பணிபுரியவும், அதிலும் குறிப்பாக ஏழைகள், கைவிடப்பட்டோருக்கு பணிபுரிவேன் என்கிற வாக்குறுதியை எடுத்துக்கொண்டார். ஜெபமாலையின் மகத்துவத்தை உலகறிய செய்வேன் என்ற அவர், □புதிய பொம்பேயின் ஜெபமாலை என்கிற சிற்றேட்டை எழுதி அதை உலகமெங்கும் அனுப்பினார்.

ஒரு நாள் மாலை அவர் நடந்து சென்று கொண்டிருந்த போது, எலிகளும், பல்லிகளும் நிறைந்த ஒரு பாழடைந்த ஆலயக் கட்டிடத்தை கடந்து போனார். அவ்விடத்தை கடக்கையில் அவர் ஒரு ஆழ்ந்த இறைஅனுபவத்தப் பெற்றார். அந்த அனுபத்தை பற்றி அவர் இவ்வாறு கூறுகிறார்: என்னுடைய இழிநிலையை நான் உணர்ந்த போது, தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் என்னில் மேலோங்கி நின்றது. அப்போது, அன்னை மரியாவின் வார்த்தைகளை திரும்ப திரும்ப சொல்லும் அருட்பணி. அல்பெர்தோவின் குரல் என் காதுகளில் ஒலித்தது. அக்குரல், 'நீ மீட்பு பெறவிரும்பினால், ஜெபமாலை பக்தியை பரப்பு. இது அன்னை உனக்கு தருகிற வாக்குறுதி' என்று சொன்னது. அக்குரல் என் ஆன்மாலை ஒளிரச் செய்தது. அங்கேயே நான் முழந்தாள்படியிட்டு கூறினேன், இது உண்மையானால், ஜெபமாலை பக்தியை உலகமெங்கும் பரப்பும் வரை இந்த நகரை விட்டு அகலமாட்டேன் என்றேன்.



அந்த ஆலயத்தை தூய்மைப் படுத்துமாறு பர்தோலோ, அந்நகர மக்களை மன்றாடினார். அவருடைய குரலுக்கு மக்களும் செவிசாய்த்து ஆலயத்தை தூய்மைப்படுத்தினர். பின், அந்நகர மக்களை மாலை நேரத்தில் அந்த ஆலயத்தில் கூடி ஜெபமாலை செபிக்க அழைப்பு விடுத்தார். ஒருசில சிறார்களைத் தவிர வேறு எவரும் வரவில்லை. இதனால், மனம் தளராத பர்தோலோ, அந்நகரில் இருந்த வசதியானவர்கள், ஏழைகள் என அனைவரையும், அவர் அவர் வீடுகளில் சந்தித்து, ஜெபமாலையையும், அன்னையின் திருஉருவ சுரூபங்களையும் அளித்து, ஜெபிக்க அழைப்பு விடுத்தார். இவரின்

முயற்சிகள் பெரிய வெற்றியை தரவில்லை. மக்கள் பர்தோலோவை மதித்தாலும், அவர் அளித்த ஜெப அழைப்பு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. கி.பி. 1873ஆம் ஆண்டு ஜெபமாலை அன்னை திருவிழாவை தன் சொந்த செலவில் நடத்தினார். திருவிழா நாட்களில் மழை பெய்தது, மறையுரை நிகழ்த்திய குரு இலக்கிய மொழியில் பேசினார். எனவே, எவரும் எதையும் புரிந்து கொள்ளவில்லை. அது மிகப்பெரிய தோல்வியாக அமைந்தது. அடுத்த ஆண்டும் பெருமுயற்சி செய்து விழாவை கொண்டாடினார். மக்களின் பங்கேற்பு குறைவாக இருந்தாலும், அவர்களுக்கு ஜெபமாலை செபிப்பதில் நாட்டத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டார். மூன்றாம் ஆண்டு, இரட்சகர் சபையை சேர்ந்த குருக்களை அழைத்தார். இருவாரங்கள் வந்து பொம்பேயில் தங்கிய குருக்கள், வீடுகளைச் சந்தித்தனர். மக்களிடம் செபிப்பதின் அவசித்தை உணர்த்தினர். திருவிழாவை நோலா நகர் ஆயர் ஜிசப்பே பாமிசானோ வந்து அர்ச்சித்து தொடங்கிவைத்தார். அந்த திருவிழா மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. இந்த ஆயரே, அங்கு ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட வேண்டும் எனவும், திருப்பயணிகள் வந்து செல்லும் திருத்தலமாக மாறவேண்டும் என்று கூறினார்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட இம்மாபெரும் பணியின் முதல் கட்டமாக, ஜெபமாலை அன்னையின் திருஉருவ படத்தை நிறுவ முற்பட்டார். விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்ட ஒரு படமே அவருக்கு கிடைத்தது. ஆனால், அந்நாளை திருஅவை சட்டத்தின் படி, வணக்கத்திற்கு வைக்கப்படும் எந்த ஒரு திருப்படமும், துணியில் ஆயில் வண்ணத்தினால் மட்டுமே வரையப்பட்டிருக்க வேண்டும் அல்லது மரத்தில் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். நேப்பிள் நகரில் இருந்த துறவற இல்லத்தில் ஒரு திருப்படம் விலைக்கு இருப்பதாக கேள்விப்பட்டார். பெர்தோலோ. அப்படமானது ஒரு பழைய பொருள்கள் கடையிலிருந்து 3.40 லிரேக்கு வாங்கப்பட்டதாகும். அப்படத்தை பற்றி பெர்தோலோ பின்வருமாறு கூறுகிறார்: அப்படம் செல்லரித்து போயிருந்தது. அன்னையின் முகம் கடின உழைப்பால் களைத்து போயிருந்த







# மாதா மன்றாட்டு மாலை

7



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## 7. மகா பரிசுத்த மாதாவே

அனைத்து அருளும் புனிதமும் சங்கமிக்கின்ற சத்தியத் தாய் அன்னை மரியா (புனித பீட்டர் கிறிஸ்லொகுஸ்)

பரிசுத்தம்-தூய்மை. பணத்தில் கிடைப்பது அல்ல. அறிவிலும் கிடைப்பது அல்ல, மாறாக நம்மைப் படைத்த பரமனோடு கொண்டுள்ள உறவின் நெருக்கத்தில் கிடைப்பதற்கும் கடவுளின் உடனிருப்பில் மனிதன் பரிசுத்தம் ஆகின்றான். கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவில் பரிசுத்தம் பரிமாறப்படுகிறது.(எசா: 57.15) ஏனெனில் கடவுள் தனது புனித தன்மையைத் தன்னுடைய மக்களில் பிரதிபலிக்க விரும்புகின்றார். நான் தூயோராய் இருப்பதுபோல நீங்களும் தூயோராய் இருங்கள்(லேவி19.2). இந்த பரிசுத்தத்தை தனது மீட்புச் செயலில் வெளிப்படுத்துகிறார்.(எசா 40-55)


மனித வாழ்வு கடவுளின் பிரசன்னத்தை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அதாவது அன்னை மரியா போன்று, கடவுளை பிரதிபலித்து பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும். அன்னை மரியா தனது கீழ்படிதலுள்ள வார்த்தையால் (ஆகட்டும்) மேலான புண்ணியத்தை சோத்துக் கொள்கிறார். பேராயர் புல்டன் ஷீன் கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் உண்டாகட்டும் என்ற ஒரு வார்த்தையால் படைப்புக்கள் உண்டாயின. புதிய ஏற்பாட்டில் ஆகட்டும் என்ற ஒரு வார்த்தையால் கடவுள் கன்னியின் கருவில் கருத்தரிக்கின்றார்.

கடவுளுக்கு அருகாமையில் இருப்பதில்தான் பரிசுத்தம் பரிணமிக்கிறது. கடவுளின் உடனிருப்பில்தான் பரிசுத்தம் பரிமாறப்படுகிறது. ஆனால் கடவுளே மரியாவில் கலந்து சங்கமமானது, பரிசுத்தத்தின் ஊற்றே மரியாவில் தஞ்சம் அடைந்திருப்பது போல என்று புனித ஜெரோம் கூறுகின்றார். மேலும் தொடர்கிறார். கடவுளின் அருள் புனிதர் அனைவரிடையே பகிர்ந்து காணப்படுகிறது. ஆனால் கடவுளின் புனிதத் தன்மையை மரியா தன்னில் முழுமையாகத் தாங்கியிருக்கிறார்.



# புனித கிளெலியா

O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

புனித கிளெலியா 1847ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் பிறந்தார். ஏழை குடும்பத்தை சார்ந்த இவர், தன்னுடைய 9ஆம் வயதில் தந்தையை இழந்தார். இவருடைய தாய் ஒரு பணக்கார குடும்பத்தை சார்ந்தவராக இருந்ததால், இவரின் உறவினர்கள் மூலம், குடும்பத்தின் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன. புனித கிளெலியா சிறுவயதிலிருந்தே அசாதாரண முதிர்ச்சியடைந்த வாழ்க்கையின் விளிம்பியங்களை கொண்டிருந்தார்.

11ஆம் வயதில் அவர் தனது முதல் நற்கருணையை பெறுகிறார், அன்றிலிருந்து அவரது வாழ்க்கை ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை பெறுகிறது. பங்குதந்தையின் வழிநடத்தலின்படி, குழந்தைகளுக்கு மறைக்கல்வியை எளிமையான முறையில் நேர்த்தியாக கற்றுக்கொடுத்தார். மேலும், மறைமாவட்ட அளவிலும் மறைக்கல்வி கற்றுக் கொடுக்க தன்னையே தாயார் செய்து கொண்டு, அதிலும் சிறப்பாக செயலாற்றினார். பலநேரங்களில், செபம் மற்றும் தவத்தில் இயேசுவோடு பயணித்தார். இந்த ஆன்மிக பயணத்தில், இந்த இளம் வயதிலேயே துறவற குழுமம் ஆரம்பிக்க ஆரம்பித்தார். இந்த பகுதியில் உள்ள அணைத்து மக்களுக்கும் வியாகுல மாதாவின் ஆன்மிக விளிம்பியன்கள், நமதுமரியின்ஊழியர்சபைகுருக்கள்வழியாகதெரிந்திருந்தது. எனவே, அந்த ஆன்மிகத்தை மையமாக கொண்டு, இந்த குழுமத்தை மூன்று சகதோழிகளோடு சேர்ந்து ஆரம்பித்தார். அவர்களின் நட்பும் மற்றும் நோக்கமும் தெளிவாகவும் ஆழமாவும் இருந்ததால், பல எதிர்ப்பிற்கும் இடையே அதே பங்கில் இந்த குழுமம் நிறுவப்பட்டது. ஒன்றாக செபிக்கவும், மக்களுக்கு சமூக மற்றும் ஆன்மிக வாழ்வில் உதவி செய்யவும், இந்த இளம் பெண்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். அவர்களின் சேவைக்கு தேவையான அனைத்தும், நாள்தோறும் அவர்களுக்கு கிடைத்துக் கொண்டே இருந்தது. அந்த பங்கிலும் மற்றும் மறைமாவட்டத்திலும், புனித கிளெலியா மீதான அபிமான மும்மரியாதையும் வளரத் தொடங்கியது. புனித கிளெலியா வெறும் 22வயதாக இருந்த போதிலும் அவரை அனைவரும் அம்மா என்று அழைத்தார்கள். ஆனால், கடவுள் அவளை தன்னிடம் அழைத்துக் கொள்ள விரும்பினார். புனித கிளெலியாவின் உடல் நலம் குறையத் தொடங்கி, காசநோய்க்கு இரையாகிறது. அவர் ஜூலை13, 1870இல் இறந்தார். தனது இறக்கும் தருவாயில், அவளது சகோதரிகளை பார்த்து, உங்கள் மத்தியில் எப்போதும் இருப்பேன் என்று உறுதியளித்தார். தன்னுடைய 23ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது மரணத்தின் முதல் ஆண்டு நினைவுநாளில், அவர் இறந்த அறையில் சகோதரிகள் கூடி செபித்தனர். முதல்முறையாக அவர்களுடன் புனித கிளெலியாவும் சேர்ந்து செபம் செய்யும் குரல் கேட்டது. அப்போதிருந்து, சுமார் 150முறை இந்த குரலை ஆவணப்படுத்தி உள்ளனர். புனித கிளெலியா பார்பியேரி 1968 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் முத்திப்பேறு பட்டம் பெற்றார், மற்றும் 1989 ஆம் ஆண்டில் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் புனிதராக அறிவிக்கப்பட்டார்.







ஒரு கிராமத்து பெண்ணின் முகம் போல் இருந்தது. அப்படத்தில் இடம் பெற்றிருந்த மற்ற உருவங்களை பற்றி சொல்லத் தேவையில்லை. புனித தோமினிக் பைத்தியக்காரரை போல் தோற்றமளித்தார். அன்னையின் மறுபுறம் ஒரு ரோஜா மலர் இருந்தது. அந்த இடத்தில் பின்னாளில் நான் சியன்னா நகர் புனித கத்ரீனின் திருஉருவம் இடம் பெற செய்தேன். அதை பெறுவதா வேண்டாமா என்ற குழப்பத்தின் இறுதியில், ஆண்டவரின் வழிகாட்டுதல் என எண்ணி பெற்றுக் கொண்டேன்.

நேப்பிள் நகரிலிருந்து பொம்பேய்க்கு எளிதில் கொண்டு செல்ல இயலாதவாறு அப்படம் பெரியதாக இருந்தது. இறுதியில், ஒருவர் அப்படத்தை பொம்பேய் கொண்டுவர ஒத்துக்கொண்டார். பொம்பேய் வந்தடைந்த போது, அப்படமானது வண்டியிலிருந்த உர மூட்டைகளுடன் இருந்தது. பெர்தோலோ முதலில் அப்படத்தை தொழில்முறை சாராத ஒரு ஓவியரைக் கொண்டு புதுப்பித்தார். புதுப்பிக்கப்பட்ட திருப்படமானது, ஜெபமாலை சகோதர குழுமம் உருவான கி.பி. 1876ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் நாள் ஆலயத்தில் வணக்கத்திற்காக நிறுவப்பட்டது. கி.பி. 1880ஆம் ஆண்டு இத்தாலியின் புகழ்பெற்ற ஓவியரான பெதரிகோ மத்தரெல்லி இத்திருப்படத்தை நன்முறையில் புதுப்பித்தார். இறுதியாக, இந்த திருப்படமானது கி.பி. 1965ல் வத்திக்கான் ஓவியர்களால் முழுமையாக புதுப்பிக்கப்பட்டது.

இத்திருப்படமானது, புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயத்தில் முதலில் வைக்கப்பட்டது. பெருந்திரளாக மக்கள் அன்னையிடம் வேண்டு பல்வேறு அருள் கொடைகளை பெற்ற வண்ணம் இருந்தனர். இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் அன்னையின் பரிந்துரையால் குணமடைந்த நால்வரின் சான்று கி.பி. 1876ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன. அதன்பின் நூற்றுக்கணக்கான குணமளிக்கும் நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# இணைச்சட்டம் 18-34



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 2 |
| | 5 | | | | | | | 6 | |
| | | 9 | | | | | 10 | | |
| | | | | | | 12 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 13 | | | | | | |
| | | | | | | | 11 | | |
| | 7 | | | | | | | 8 | |
| 3 | | | | | | | | | 4 |

**வலமிருந்து இடம்**

2) ஒருவனது எந்தக் குற்றத்தையும் எந்தப் பழிபாவச்செயலையும் உறுதி செய்ய, ஒரே ………..-வாக்குமூலம் போதாது. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தாலே அது உறுதிசெய்யப்பட வேண்டும்.

4) வேசித்தனத்தால் பிறந்தவன், அவனது பத்தாம் தலைமுறை வரைக்கும் ஆண்டவரின் திருப்பேரவைக்குள் …………

6) அவர் எங்களை இந்த இடத்திற்குக் கூட்டிவந்தார். பாலும் ………வழிந்தோடும் இந்த நாட்டை எங்களுக்குத் தந்தார்.

8) ஆனால் கொழுத்த காளை மார்பிலே பாய்ந்தது: எசுரூன் கொழுத்துப் பருத்து முரடனானான்: தனைப்படைத்த கடவுளை விட்டு அவன் விலகினான்: ……….. மீட்பின் பாறையை எள்ளி நகைத்தான்.

10) ஒருவனது எந்தக் குற்றத்தையும் எந்தப் பழிபாவச்செயலையும் உறுதி செய்ய, ஒரே சாட்சியின் வாக்குமூலம் ……….. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தாலே அது உறுதிசெய்யப்பட வேண்டும்.

11)அன்னியர் அல்லது அனாதைக்கு உரிய நீதியைப் புரட்டாதே. …………ஆடையை அடகாக வாங்காதே

12) அவள்மேல் ………… விருப்பமில்லாமற் போனால், அவள் விருப்பம் போல் அவளைப் போகவிடு. நீ அவளைக் கெடுத்துவிட்டதால் பணத்துக்கு விற்கவோ அடிமைபோல் நடத்தவோ வேண்டாம்.

**இடமிருந்து வலம்**

1) ஓர் இறைவாக்கினன் ………… பெயரால் உரைப்பது நடைபெறாமலும் நிறைவேறாமலும் போனால், அந்த இறைவாக்கினன் தன் எண்ணப்படியே பேசுபவன். அவனுக்கு நீ அஞ்ச வேண்டியதில்லை.

3) மணமாகியும் கன்னிமை கழியாத ஒருத்தியை நகரில் ஒருவன் ………. அவளோடு உறவுகொண்டால், அவர்கள் இருவரையும் நகர் வாயிலுக்குக் கொண்டு போய்க் கல்லால் எறிவர்: அவர்களும் சாவர்





அன்புக்கும் பிரமாணிக்கமாய் வாழ்ந்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இயேசு ஏற்படுத்திய புதிய உறவு, பயந்து அஞ்சி வாழ்ந்த மனநிலையை மாற்றி சுதந்திரத்தோடு வாழும் உரிமையைக் கொடுக்கின்றது. அடிமை மக்களாக இருந்த மனநிலைகளை மாற்றி, உரிமைக் குடிமக்களாக வாழும் மனநிலையை தருகிறது. இதைத்தான் இன்றைய இரண்டாம் வாசகத்தில், கடவுளால் அழைக்கப்பட்டவர்கள், அவரால் வாக்களிக்கப்பட்ட என்றும் நிலக்கும் உரிமைப் பேற்றை பெறுவதற்கென்று இந்த புதிய உடன்படிக்கை உண்டானது என்று வாசிக்கின்றோம். ஆகவே புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, உமது புதிய உடன்படிக்கையின் அடையாளமாகிய இத்திருப்பலியை நிறைவேற்றும் ஒவ்வொரு திருஅவைப் பணியாளரையும் ஆசீர்வதியும். பலிகளாலும், வாழ்வாலும் உம்மை மகிமைப்படுத்திட தேவையான வரங்களைக் கொடுத்தருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, உமது திருப்பலியில் பங்கு பெறும் நாங்கள் ஒவ்வொருவரும் உம் திரு இரத்தத்தால் எங்கள் பாவங்களைக் கழுவி, உடலிலுள்ள நோய்களைக் குணமாக்கி நலமான வாழ்வைப் பெற்று மகிழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உமது திரு உடலையும், திரு இரத்தத்தையும் அன்றாடம் சுவைக்க ஆர்வத்தோடு தவறாமல் தினமும் திருப்பலியில் பங்கேற்கும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உமது தியாகப் பலியில் ஆர்வத்தோடு பங்குபெறும் நாங்கள் ஒவ்வொருவரும் உம்மை போன்று நாங்கள் பிறரது நன்மைக்காக எங்களையே தியாகமாக கொடுக்கவும், எங்களிடம் இருப்பதை பிறரோடு பகிர்ந்து வாழவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் உமது குரலுக்கு செவிகொடுத்து, உம்மோடு நாங்கள் கொண்டுள்ள உறவை உறுதிப்படுத்திக் கொண்டு உமது அன்பு பிள்ளைகளாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இயேசுவின் திருவுடல், திரு இரத்தம் பெருவிழா(02.06.2024)

**விபா 24:3-8 எபி 9:11-15 மாற் 14:12-16,22-25**

### முன்னுரை

உறவுகளின் முடிச்சுதான் மனித வாழ்க்கை. எல்லா உறவுகளுக்கும் அடிப்படை அன்பு. அன்பின் நிறைவுதான் தியாகமாக பகிர்வாக பிரதிபலிக்கின்றது. கடவுளுக்கும், இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே நிலவிய உடன்படிக்கை அன்பின் வெளிப்பாடாகும். இஸ்ரயேல் மக்கள் தங்களது பாவத்தால் கடவுளோடு செய்த உடன்படிக்கையை முறித்தனர். இருப்பினும் அவர்களைத் தண்டிக்காது, இறைவாக்கினர் எரேமியா வாயிலாக புதியதோர் உடன்படிக்கையை முன்னறிவித்தார். கடவுள் முன்னறிவித்த இப்புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் கிறிஸ்துவே. தமது இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையைச் செய்தார். மனிதன் செய்யும் தியாகங்களையெல்லாம் கடந்து, தியாகத்தின் உச்சகட்டமாக இயேசு தமது விலைமதிப்பற்ற உடலையும் இரத்தத்தையும் நமக்காக ஆன்மீக உணவாகவும், பானமாகவும் அருளினார். எனவேதான் நற்கருணை நம் வாழ்வின் கருப்பொருளாகிறது. நற்கருணை தியாகத்தையும் பகிர்வையும் வெளிப்படுத்துகிறது.

இயேசுவின் தெய்வீகப் பலியில் பங்கெடுக்கும் நாம், தன்னையே பலியாக்கி, பகிர்ந்து கொடுத்து, உறவைக் கட்டி எழுப்பிய இயேசுவின் வழியை பிறருக்கு அறிவிப்பது மட்டுமல்லாமல் அவற்றை வாழ்வாக்குவது நமது கடமை மட்டுமல்ல, காலத்தின் கட்டாயமும் என்பதை உணர்ந்து இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

பலிப்பீடம் இறைவனுடைய பிரசன்னத்தைச் சுட்டுகிறது. இரத்தம் உயிரைக் குறிக்கிறது. பீடத்தின்மேல் தெளிக்கப்பட்ட இரத்தம் இறைவன் நம் உயிர்மீது ஆணையிட்டு, தாம் ஏற்படுத்திய உடன்படிக்கையை நிறைவேற்றுவார் என்பதைக் கூறுகிறது. இறைவன் தம் வாக்குகளில் தவறார். இறைவன் தம் உடன்படிக்கைக்கும் பிரமாணிக்கமாய் இருப்பதுபோல மக்களும் பிரமாணிக்கமாயிருக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். புதிய உடன்படிக்கையின் அடையாளமாகிய இத்திவ்ய நற்கருணையில் பங்கெடுக்கும் நாம் இறைவனுக்கும் அவரது





5) தொழுநோயைக் குறித்து எச்சரிக்கையாய் இரு. லேவிய குருக்கள் உனக்குக் கற்பிப்பதுபோல் ............ செய்வதில் மிகக் கவனமாயிரு.
7) நீ வானத்தின் கடையெல்லைவரை துரத்தப்பட்டிருந்தாலும், உன் கடவுளாகிய ஆண்டவர்,
............. உன்னைக் கூட்டிச் சேர்ப்பார்.
9) ஓரேபில் திருப்பேரவை கூடிய நாளில், நீ உன் கடவுளாகிய ஆண்டவரிடம் மன்றாடி, 'நான்
............. போகாதபடி, என் கடவுளாகிய ஆண்டவரின் குரலொலியை இனி நான் கேட்காமலும் இப்பெரும் நெருப்பை இனி நான் காணாமலும் இருப்பேனாக '.
13) அந்த மக்களினங்களிடையே உனக்கு ஓய்வு இராது: உன் உள்ளங்கால்கள் ............ இளைப்பாற இடம் இராது. அங்கே ஆண்டவர் நடுநடுங்கும் இதயத்தையும், பஞ்சடைந்த கண்களையும், தளர்வுற்ற மனத்தையும் உனக்குக் கொடுப்பார்.

**மேலிருந்து கீழ்**

1) வெறுக்கப்பட்ட பெண்ணின் புதல்வனையே தலைச்சனாக ஏற்றுக் கொண்டு, தன்னிடம் உள்ள சொத்துக்களில் அவனுக்கு இரண்டு பங்கு கொடுக்க வேண்டும். ஏனெனில் அவனே தன் தந்தையின் ............. முதற் கனி. தலைச்சனுக்குரிய உரிமை அவனையே சாரும்.
2) ............. ஏதுவான பாவம் செய்த மனிதன் சாகடிக்கப்பட்டபின் அவனது பிணத்தை ஒரு மரத்திலே தொங்கவிடு,
5) போர் .............மாட்டின் வாயைக் கட்டாதே.
6) அவன் தனக்கெனச் சிறந்த இடத்தைத் ............. கொண்டான்: தலைவனுக்குரிய பங்கு அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது
9) எனவே,ஆண்டவர் கூறியபடியே, அவர்தம் ஊழியர் மோசே மோவாபு நாட்டில் ...............
10) நீ உன் பகைவருக்கு எதிராகப் போருக்குப் ..............., உன்னிடம் உள்ளதைவிட மிகுதியான குதிரைகளையும், தேர்களையும், பெரும் படையையும் நீ கண்டால், அவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில்,எகிப்திலிருந்து உன்னை வெளியே கூட்டிவந்த உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னோடு உள்ளார்.
12) தம் தலைவனிடமிருந்து தப்பிவந்து ............. அடைக்கலம் தேடியுள்ள அடிமைகளை அவனிடம் ஒப்படைக்காதே.

**6) கீழிருந்து மேல்**

3) அது உன்னிடம் ............. உனக்கு எதிராகப் போர் தொடுத்தால், நீ அதை முற்றுகையிடு.
4) எனவே, பசியோடும்,தாகத்தோடும், வெற்றுடம்போடும் யாது மற்ற நிலையிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கெதிராக அனுப்பும் உன் பகைவர்களுக்கு நீ பணிவிடை செய்வாய். அவர்கள் உன்னை அழித்தொழிக்கும் மட்டும் இரும்பு ............ உன் கழுத்தில் வைப்பர்
7) நீங்கள் .............. உண்ணவோ, இரசம் குடிக்கவோ, மதுபானம் அருந்தவோ இல்லை. இதனால், நானே கடவுளாகிய ஆண்டவர் என்று நீங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.
8) செபுலோனைக் குறித்து அவர் கூறியது: செபுலோனே. நீ பயணம் செய்கையில் மகிழ்ந்திடு! இசக்காரே, நீ கூடாரங்களில் .............. போது மகிழ்ந்திடு!
11) .............. உன் பகைவர்களுக்கு எதிராகப் போர் புரியப்போகையில், உன் கடவுளாகிய ஆண்டவர் அவர்களை உன் **கையில்** ஒப்படைப்பார். நீ அவர்களைச் சிறைப்பிடிப்பாய்.
13) ..............அடுத்திருப்பவரின் எல்லைக் கல்லை அப்புறப்படுத்துபவர் சபிக்கப்படட்டும்

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-05-2024**

# அனைவருக்கும் உரித்தான பெருமையே அவர்

⑫



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அலையலையாய் அன்னையவர் ஆலயத்தில் - பெருந்திரளாய்
அணிவகுக்கும் மக்கள்படைக் கூட்டம்
அவனியெங்கும் அன்னையவர் வரம்பொழியும் - பேர்
அளவில்லா அருள்மழையின் தாக்கம்
　　உடலுள்ள நலம்வேண்டி பலபேர் - செல்வக்
　　குழந்தை வரம்வேண்டி பலபேர்
　　கடனில்லா நிலைவேண்டி பலபேர் - நன்றி
　　கடனெல்லாம் நிறைவேற்ற பலபேர்
காரியங்கள் தொடங்கிவிட பலபேர் - எடுத்த
காரியங்கள் தீர்ந்ததற்காய் பலபேர்
விளைச்சல்கள் தரவேண்டி பலபேர் - பெற்ற
விளைச்சல்சில கரமேந்தி பலபேர்
　　மெழுகுத்திரி மலர்மாலை காணிக்கைகள் - கரங்களிலே
　　தென்னங்கன்று புடவைகளும் சார்த்தனங்கள்
　　மழித்தத்தலை பணித்தநிலை சாட்சியங்கள் - கடுமையாய்
　　மண்டியிட்டு நடைபோடும் காட்சியங்கள்
காதுகுத்தி கறிசமைத்து விருந்தோம்பல் - குடும்பமாய்
சோறுசெஞ்சி படையலிட்டு மகிழோம்பல்
ஆங்காங்கே இடம்காணும் அன்னதானம் - பசித்தோரில்
ஆண்டவனை இனம்காணும் மெய்ஞானம்
　　திருப்பயணம் மேற்கொள்ளும் தவமுயற்சி – பலமைல்கள்
　　கால்கடுக்க நடந்துவரும் கடும்முயற்சி
　　கொடியேற்றம் தேரோட்டம் பங்கேற்பு – நடைப்பயிலும்
　　திருப்பலிகள் கொண்டாட்ட நேர்ந்தளிப்பு
இவையெல்லாம் என்னத்த சொல்லுதய்யா? – அன்னையவர்
வரையில்லா அன்புதான் மின்னுதய்யா
கோடிக்கோடி நன்மைகளை உரைக்குதய்யா – அன்னையாரை
தேடும் தன்மைகளை விளக்குதய்யா
　　இன்னுமா பழிக்கூற உதிக்குதய்யா? – சிலரின்
　　உதடுகள் வழியின்றி பிதற்றுதய்யா
　　சிலருக்கு மட்டுமே உரிமையாஅவர் - இல்லையில்லை
　　அனைவருக்கும் உரித்தான பெருமையேஅவர்





மூவொரு கடவுளிடமிருந்த அன்பு, சமாதானம், நட்புறவு நம் வாழ்விலும் இறுதிவரை நிலைத்திருக்கும்.

**முதல் வாசக முன்னுரை**

மூவொரு கடவுள் திருநாளன்று, அக்கடவுளின் அளப்பரிய அன்பு பற்றி இவ்வாசகம் கூறுகிறது. யாதொரு மக்களுக்கும் கொடுக்கப்படாத கொடை, இறைவன் இஸ்ரயேலரோடு பேசியது. இறைவன் இவர்களோடு கொண்ட உறவைக் காட்டுகிறது. நெருப்பின் நடுவிலிருந்து அன்று பேசிய இறைவன், விவிலியம் வழியாகவும், இன்றைய காலத்தின் அறிகுறிகள் வழியாகவும் பேசிக் கொண்டிருக்கிறார். இவ்வாறு அவருடைய வார்த்தையை நாம் விரும்பிக் கேட்போம், நம்மைத் தம் வழியிலே அவரே நடத்துவார். நம்மோடு பேசும் இறைவனுக்கு திறந்த மனதுடன் செவிமடுத்து இறையுறவில் வளர முயல்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

ஆவியானவரின் செயலால், கடவுளின் பிள்ளைகளாகி, கிறிஸ்துவின் மகிமையில் பங்குபெறும் வாய்ப்பு நம் எல்லோருக்கும் கிட்டுகிறது என்று இன்றைய இரண்டாம் வாசகம் கூறுகிறது. மூவொரு கடவுள் பெருவிழா நாளன்று இம்மூவொரு கடவுளோடு கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டுள்ள உறவு இவ்வாசகத்தின் வழியாக வெளிப்படுகிறது. மூவொரு இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவை உறுதிபடுத்திக் கொண்டு அவ்விறை உறவை நமது அனுதின மனித உறவில் வெளிப்படுத்த அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, தந்தை, மகன், தூய ஆவியார் ஒன்றாக இருப்பது போல எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஒன்றாய் உம் திரு அவையை வழிநடத்திட வேண்டிய இறை அருளை நிறைவாய் பொழிய அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, திருவருட்சாதனங்கள் வழியாக நாங்கள் பெற்றுக் கொண்ட ஆவியானவரின் துணையால் நாங்கள் ஒவ்வொருவரும் தந்தையின் அன்பையும், மகனின் அருளையும், தூய ஆவியின் நட்புறவையும் நிறைவாய் பெற்று முழுமையின் மக்களாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, எமது திருஅவை மற்றும் எமது குடும்பங்களில் கருத்து வேற்றுமையினால் ஏற்படுகின்ற பிளவுகளையும், வேறுபாடுகளையும் களைந்து நாங்கள் ஒவ்வொருவரும் சமாதானத்தோடும், சகோதரத்துவத்தோடும் மற்றும் ஒற்றுமையோடும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எம் திருஅவையில் சாதி, மொழி, நிற வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமையுடனும், சகோரத்துவத்தோடும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, யூதர்களுக்கு பயந்து இருந்த அப்போஸ்தலர்கள், தூய ஆவியாரைப் பெற்ற பிறகு துணிவோடு நின்ற கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் இருந்தது போல நாங்கள் எல்லா கவலைகள், பயம் மற்றும் தீமைகளிலிருந்து விடுதலை பெற்று மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழும் குடும்பங்களும், திருஅவையும் தூய ஆவியின் வல்லமையால் இணைந்து ஒற்றுமையோடும், சமாதானத்தோடும் வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூய தமத்திருத்துவ பெருவிழா(26.05.2024)**
**இணை 4:52-54,39-40 உரோ 8:14-17 மத் 28:16-20**
**முன்னுரை**

மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று என மனித குலத்துக்குச் சூத்திரம் வகுத்தக் கடவுள் தாமும் தனித்துச் செயல்பட விரும்பவில்லை. எனவேதான் தந்தை, மகன், தூய ஆவியார் என மூவரும் ஒரே கடவுளாய் ஒன்றித்து உலகைப் படைத்து இயக்குகின்றனர். மனிதனால் எளிதில் புரிந்து கொள்ளப்பட முடியாது. ஆனால் வழிபாட்டில் அதிகமாகப் பயன்படுத்துகின்ற கிறிஸ்தவ மறைபொருள் ஒரே கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கிறார் என்பது. அத்தகைய மறைபொருளை இறைஞானத்தோடு அறியவும், அத்தமத்திருத்துவத்தின் அன்பையும், அருளையும், நட்புறவையும் நிறைவாய் பெற இன்றைய பெருவிழா நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

மூவொரு கடவுள் படைப்பவராக, மீட்பவராக நம்மோடு இருந்து நம்மை வழி நடத்துபவராக இருக்கிறார். இன்றைய வார்த்தை வழிபாடு மூவரின் செயல்பாடுகளைத் தெளிவுபடுத்துகின்றன. மூவொரு கடவுளிடமிருந்த அன்பு, ஒற்றுமை, நட்புறவு இந்த மூன்று பண்புகளையும் நமதாக்கிக் கொண்டு வாழ இன்றைய பெருவிழா நம்மை அழைக்கின்றது. மூவொருக் கடவுளிடமிருந்த அன்பு, ஒற்றுமை, சமாதானம் இவைகள் நமது சொல், செயல், சிந்தனைகள் வழியாக பிரதிபலிக்க வேண்டும் அப்போது இறைவன் நமது இதயத்தில் உறைகிறார் என்பது பொருளாகிறது. முழுமையான, நிறைவான இறைவனை நமதாக்கிக் கொள்ள நம்மிடம் உள்ள குறைகளையும், பலவீனங்களையும் பின்னுக்குத் தள்ளி நிறைவை நோக்கி பயணம் செய்வோம். அப்போது





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழா(12.05.2024)**
**திபா 1:1-11 எபே 1:17-23 மாற் 16:15-20**
**முன்னுரை**

இன்று திருஅவை இயேசுவின் விண்ணேற்ற விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறது. இயேசு, உயிர்த்தபின் நாற்பது நாட்கள் மீண்டும் உலகிலேயே இருந்து அவ்வப்போது ஆங்காங்கே தோன்றி காட்சி அளித்து தமது சீடர்களின் விசுவாசத்தை உறுதிபடுத்தியபின் அவரது இறையரசு இவ்வுலகில் தொடர அவர்களுக்கு உறுதுணையாக தூய ஆவியாரை அனுப்பப் போவதாக வாக்களித்து விண்ணகம் செல்கிறார்.

இயேசு விண்ணகம் சென்றது நமக்காக, நமக்காக தந்தையிடம் பரிந்து பேசுவதற்காக என்ற ஆழ்ந்த விசுவாசத்தை நம்மில் எழுப்ப வேண்டும். இவ்விழா எங்கெல்லாம் நற்செய்தி போதிக்கப்படுகிறதோ, நற்செய்தி மதிப்பீடுகள் வாழ்க்கைப் படுத்தப்படுகின்றதோ அங்கெல்லாம் அவரே செயலாற்றி வருகிறார் என்கின்றது இன்றைய நற்செய்தி வாசகம். எனவே விண்ணெழுந்த இயேசு மண்ணக மக்களோடு நெருங்கிய உறவு கொண்டிருக்கிறார் என்பதை ஆழ்ந்து விசுவசிப்போம். அந்த நம்பிக்கை நம்மை வழிநடத்துவதாக. விண்ணகம் சென்ற இயேசுவின் பணியை இவ்வுலகில் தொடர்ந்து நிறைவேற்ற நம்மைத் தவிர அவருக்கு வேறு யாருமில்லை என்பதை ஏற்று உயிர்த்த ஆண்டவருக்கு சாட்சிகளாய் வாழ்வோம். அதன் வழியாக இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்புவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு விண்ணேறிச் சென்றபோது சீடர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து கொண்டிருந்ததாகவும் அப்போது வானதூதர் விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் என்று ஆறுதல் கூறியதாகவும் வாசிக்கின்றோம். விண்ணகம் சென்ற ஆண்டவர் மீண்டும் மாட்சியுடன் திரும்பும் நாள் வரை நாம் அவரது நற்செய்தியை போதிக்கவும் அவரது நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்வாக்கவும் அழைக்கப்படுகின்றோம் இந்த இறை அழைப்பை ஏற்று அவரது பணியை தொடர இறையருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

மனிதனாக பிறந்ததன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்கு மட்டுமே தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்திய இயேசு, விண்ணேற்பு மூலம் உலகம் முழுவதும் தம்முடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரது பிரசன்னம் உலகம் அனைத்திற்கும் வாழ்வுதர வல்லதாகவும் இருக்கின்றது. இயேசு அனைத்தின் மீதும் அதிகாரம் கொண்டவராதலால் தீமையை ஒருபோதும் வெற்றிபெற அனுமதிக்கப்பட்டார் என்ற நம்பிக்கையை இன்றைய விழா நமக்கு தருகின்றது. அத்தகைய நம்பிக்கையோடு வாழ அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இயேசு இவ்வுலகில் விட்டுச் சென்ற அவரது பணியை தொடர்ந்து ஆற்றி இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பி தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, திருமுழுக்கு என்ற அருட்சாதனத்தை பெற்றுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வுலக காரியங்களில் அதிகமான அக்கறை காட்டாமல் விண்ணகம் சார்ந்தவற்றை நாட தேவையான இறைஞானம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, மாட்சியுடன் விண்ணகம் சென்ற இயேசு, இறுதி நாளில் மாட்சியுடன் மீண்டும் வருவார் என்பதை விசுவசித்து அவரது வருகையின்போது அவரது அன்புக்கு உகந்த மக்களாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் உயிர்த்த ஆண்டவரின் இறையனுபவத்தை நிறைவாகப் பெற்று அவ்விறை அனுபவத்தை பிறரோடு பகிர்ந்து உமது உயிர்ப்பின் சாட்சிகளாக வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## தூய ஆவிப் பெருவிழா(19.05.2024)

**திபா 2:1-13 1கொரி 2:3-7,12-13 யோவான் 20:19-23**

**முன்னுரை**

அன்றாட வாழ்வில் பல இன்ப துன்பங்களை சந்திக்கின்றோம். மனித வாழ்வு வளர்ச்சியை நோக்கி பயணம் செய்யும்போது அவ்வப்போது தடுமாற்றம் மேடு பள்ளங்களைச் சந்திக்கிறோம். அப்படிபட்ட சூழ்நிலையில் நம்மை வழிநடத்த ஒரு துணை தேவைப்படுகிறது. அந்த துணையாளர்தான் தூய ஆவியானவர். தூய ஆவி இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை, கிறிஸ்தவ வாழ்வும் இல்லை. இதையே கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல என்கிறார் புனித பவுல். உங்களுக்கு ஒரு துணையாளரை அனுப்புவேன் என்று வாக்களித்துச் சென்ற இயேசு, தான் சொன்னபடியே தூய ஆவியை அனுப்பினார். இத்தூய ஆவி மக்களை முழு உண்மையை நோக்கி வழிநடத்துபவர், வாழ்வும் அமைதியும் தருபவர், சாவுக்குரிய மனிதரின் உடலை உயிர்த்தெழச் செய்கிறவர். வாழ்வு தரும் தண்ணீர் அத்தகைய தூய ஆவியை நாமும் பெற்று, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ இன்றைய இறைவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பெந்தகோஸ்தே பெருவிழாவில் இயேசுவின் சீடர்கள் ஆவியின் கொடைகளையும் கனிகளையும் பெற்று துணிவுடன் இயேசு வாழ்ந்ததுபோல நாமும் அத்தூய ஆவியை பெற்று துணிவோடும், நம்பிக்கையோடும் நமது கிறிஸ்தவ வாழ்வை தொடர்ந்திட அருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

தனது மீட்புப் பணியை வெற்றிகரமாக முடித்த இயேசு, மாட்சிமையுடன் விண்ணோக்கிச் சென்று, தான் ஏற்கனவே வாக்களித்தபடி இறை ஆற்றலாம் தூய ஆவியானவரை அனுப்புகிறார். ஆவியானவரின் தனிப்பட்ட ஆற்றலை நிறைவாகப் பெற்று, பல மொழிகளில் பேசி திருஅவையின் அகில உலகத் தன்மையை திருத்தூதர்கள் அன்று வெளிப்படுத்தினார்கள். கிறிஸ்து நிறுவிய இவ்வகில உலகத் திருஅவையை ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ அருள் வேண்டுவோம் இம்முதல் வாசகத்தின் வழியாக.

**இரண்டாம் வாசக முன்னுரை**

திருஅவையில் நிலவ வேண்டிய ஒற்றுமைபற்றி பவுலடியார் ஆழ்ந்த இறையியலை அதில் தருகிறார். திருஅவை வாழ்வின் அடிப்படை தூய ஆவியானவரே. கிறிஸ்துவின் உடலே திருஅவை. உடலில் பல உறுப்புகள் உள்ளது போல, திரு அவையிலும் பல்வேறு உறுப்புகள் உள்ளன. பல உறுப்புகள் சேர்ந்துதான் உடல் அமைகிறது. பல உறுப்பினர்கள் சேர்ந்தே திருஅவையும் உருவாகிறது. அவ்வாறெனில், பிளவுபட்ட திருஅவை ஒரு முரண்பாடாகிறது. எனவே திருஅவையில் ஒற்றுமை நிலவவும், திருஅவை எப்போதும் கிறிஸ்துவில் இணைந்து செயல்பட அருள் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியின் கொடைகளையும், கனிகளையும் பெற்று கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.